ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, வேலூர் மாவட்டம்
கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க..எண்.1216/மாஒ6/ஒபக/2024, நாள். 21.08.2024

பொருள் : ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி – வேலூர் மாவட்டம் – 2024–2026 ஆம் ஆண்டுகளுக்கான பள்ளி மேலாண்மைக் குழு மறு கட்டமைப்பு – மூன்றாம் கட்ட பள்ளி மேலாண்மைக் குழு மறுகட்டமைப்பு – 24.08.2024 அன்று நடைபெறுதல் – பார்வையாளர்கள் நியமித்து ஆணையிடுதல் – சார்பு.

பார்வை : 1. சென்னை–6, மாநிலத் திட்ட இயக்குநர், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி அவர்களின் கடிதம் ந.க.எண்.1342/A11/பமேகு/ஒபக/2024, நாள்.30.07.24.
2. வேலூர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் ஆலோசனைகள் நாள்.05.08.2024.

*********

பார்வை 1–ல் காணும் சென்னை–6, மாநிலத் திட்ட இயக்குநர், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி அவர்களின் கடிதத்திற்கிணங்க, 2024–2026 ஆம் ஆண்டுகளுக்கான பள்ளி மேலாண்மைக் குழு மறு கட்டமைப்பு செய்யும் பொருட்டு 10.08.2024 அன்று தொடங்கி நான்கு கட்டங்களாக நடைபெறவுள்ள மறுகட்டமைப்பு நிகழ்வுகளில் 24.08.2024 அன்று மூன்றாம் கட்டமாக பள்ளி மேலாண்மைக் குழு மறுகட்டமைப்பு செய்யவுள்ள உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு (134 பள்ளிகள்) இணைப்பில் உள்ளவாறு. வேலூர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் வழிகாட்டுதல் படி பள்ளிகளைப் பார்வையிட பார்வையாளர்கள் நியமிக்கப்பட்டு ஆணையிடப்படுகிறது.

பார்வை 1–ல் காணும் கடிதத்தில் தெரிவித்துள்ள வழிகாட்டு நெறிமுறைகளைப் பின்பற்றி பள்ளிகளில் பள்ளி மேலாண்மைக்குழு மறுகட்டமைப்பு நடைபெறுவதை பார்வையாளர்கள் உறுதி செய்து பார்வையாளர்களுக்கான இணையவழிப் படிவத்தை பூர்த்தி செய்யக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேலும் எவ்வித புகார்களுக்கும் இடமளிக்கா வண்ணம் பள்ளி மேலாண்மைக் குழு மறு கட்டமைப்பைச் சிறப்பாக நடத்திடவும் அது சார்ந்த விவரங்களை உரிய படிவங்களில் பூர்த்தி செய்து உடன் EMIS வலைதளத்தில் பதிவேற்றம் செய்திடவும் சார்ந்த பள்ளித் தலைமையாசிரியர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலர்,
மாவட்டத் திட்ட அலுவலகம்,
ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி,
வேலூர் மாவட்டம்.

21/8/24

இணைப்பு –
1. பார்வை 1–ல் காணும் கடித நகல்.
2. பார்வையாளர்கள் விவரம்.

பெறுநர்
1. சார்ந்த அரசு தொடக்கப் பள்ளித் தலைமையாசிரியர்கள் (உரிய வழியாக)
2. சாரந்த பார்வையாளர்கள் (உரிய வழியாக)

நகல் –
1. வேலூர் மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு தகவலுக்காக பணிவுடன் அனுப்பலாகிறது.
2. முதன்மைக் கல்வி அலுவலர், வேலூர் – அவர்களுக்கு கனிவுடன் அனுப்பலாகிறது.
3. மாவட்டக் கல்வி அலுவலர்கள் (தொடக்க / இடைநிலைக் கல்வி).
4. அனைத்து வட்டாரக் கல்வி அலுவலர்கள், வேலூர் மாவட்டம்.
5. அனைத்து வட்டார வளமைய மேற்பார்வையாளர்கள் (பொ) மற்றும் ஆசிரியர் பயிற்றுநர்கள்.

D:\OFFICE SS\DC5 OSC\SMC Reg\SMC 2024 Reconstitution Reg.doc